(திருத்தப்பட்டது) செய்தி வெளியீட்டு எண்: 51 நாள்: 25.01.2024

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.சஞ்சய் வி கங்கபுர்வாலா அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தினை திறந்து வைத்தார்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.சஞ்சய் வி கங்கபுர்வாலா அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தினை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு.எம்.சுந்தர், திரு.எம்.தண்டபாணி, திரு.கிருஷ்ணன் ராமசாமி, திரு.டி.பரதசக்கரவர்த்தி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டதுறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி ஆகியோர்கள் முன்னிலையில் இன்று (25.01.2024) திறந்து வைத்து குத்து விளக்கேற்றி திறந்து வைத்தர். பின்னர், தேச தந்தை அண்ணல் மகாத்மா காந்தியடிகள், தெய்வப்புலவர் திருவள்ளுவர் ஆகியோர்களின் திருவுருவப்படங்களை புதிதாக திறக்கப்பட்ட நீதிமன்றத்தில் திறந்து வைத்தார்.

பின்னர், கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியாக திருமதி.இருசன்பூங்குழலி அவர்களும், தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதியாக திரு.ஸ்ரீராம் அவர்களும் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

பின்னர், கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற திறப்பு விழா நிகழ்ச்சிகள் மாடூர் ஏ.என்.பி மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.சஞ்சய் வி கங்கபுர்வாலா அவர்கள் நீதி மன்ற திறப்பு விழா பேருரையில், தெரிவித்ததாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், அமர்வு நீதிமன்றம் அமைந்தது இளம் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும், தமிழ்நாட்டின் தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி என்ற முறையில் கலந்து கொள்வதில் பெருமையடைகிறேன் எனவும், தமிழகத்தில் மக்களுக்கான தேவையை நீதி துறை அனைத்து மாவட்டங்களில் சிறப்பான முறையில் செய்து வருகிறது. அந்த வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், நீதிமன்றம் மக்களுக்கான சேவைகளை சிறப்பாக செயல்படுத்தும் என உறுதி அளிக்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி செல்வி.ஆர்.பூர்ணிமா வரவேற்புரையும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு.எம்.சுந்தர் அவர்கள் விழா முதன்மை உரையும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு.எம்.தண்டபாணி அவர்கள், திரு.கிருஷ்ணன் ராமசாமி அவர்கள், திரு.டி.பரதசக்கரவர்த்தி அவர்கள் மற்றும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டதுறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் சிறப்புரையும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இஆப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சமங்சிங் மீனா, இகாப, அவர்கள், கள்ளக்குறிச்சி வழக்கறிஞர்கள் பார் அசோசியேசன் செயலாளர் திரு.பி.சீனிவாசன் அவர்கள் வாழ்த்துரையும், மாண்பமை விழுப்புரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி செல்வி.எம்.புஷ்பராணி அவர்கள் நன்றியுரையும் ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், 40 ஆண்டுகள் வழக்கறிஞர்களாக பணியாற்றிவரும் மூத்த வழக்கறிஞர்களுக்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.

இந்நிகழ்வில், மாண்பமை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிபதி திருமதி.கே.கீதாரணி, மாண்பமை கள்ளக்குறிச்சி நீதிபதிகள் திருமதி.மைதிலி, திரு.தனசேகர், திரு.முகமது அலி, திருமதி.சுகந்தி, திரு.ஹரிஹரசுதன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வசந்தம்.க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.மா.செந்தில்குமார் மற்றும் சங்கராபுரம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை ஆகிய சார்பு நீதிமன்றங்களின் நீதிபதிகள், அரசு வழக்கறிஞர்கள், கள்ளக்குறிச்சி மாவட்ட வழக்கறிஞர்கள், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் திரு.க.ஆயித்தரசு ராாசேகரன், சிறப்பு தலைமை பொறியாளர் திரு.இரா.வெங்கடாசலம், செயற்பொறியாளர் திருமதி.ச.ஹேமா, உதவி செயற்பொறியாளர் திருமதி.க.மாலா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**<u>செய்தி வெளியீடு:</u>**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.